**அசல் வழக்கு எண். 36/2023** **தேதி-18.07.2025**

**வா.சா.1 - தனலெட்சுமி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாசில்தார், கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சவரிமுத்து என்பவரிடமிருந்து எனது தாயார் கிரையம் பெற்ற சொத்தாகும். சவரிமுத்துக்கு ஆதியில் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சவரிமுத்து எனது தாயாருக்கு எந்த வருடம் கிரையம் கொடுத்தார் என்றால் சரியாக தெரியவில்லை.

2. எனது தாயார் கிரையம் வாங்கிய அசல் பத்திரத்தை நான் ஏன் தாக்ல செய்யவில்லை என்றால் நகல் போட்டு தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா-ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் நான்கு எல்லைக குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பஞ்சாயத்திற்கு எல்லைக்குட்பட்ட இடம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தனமேரி என்பவரிடமிருந்து தான் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் சவரிமுத்து மருமகள் ஆவார். சவுரிமுத்து மருமகள் தனமேரியின் பெயரில் மேற்படி சொத்தின் பட்டா மற்றும் இதர வருவாய் துறை ஆவணங்கள் இருந்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் மேற்படி தனமேரிக்கு பாத்தியப்பட்டதாக தாவா சொத்தை பொறுத்து ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு எனது தாயார் ராமாயி அம்மாள் பெயரில் நிலம் இருந்ததற்கான பட்டா மற்றும் இதர வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ராமாயி அம்மாள் எப்போது இறந்தார் என்றால் சுமார் 9 வருடங்கள் முன்பு இறந்தார்.

3. எனது தாயார் ராமாயி அம்மாளுக்கு மொத்தம் 7 குழந்தைகள். அதில் 4

மகன்கள் மற்றும் 3 மகள்கள் உள்ளனர். ராமாயி அம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ராமாயி அம்மாளின் வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் என் பெயருக்கே எழுதி கொடுத்துவிட்டார். எப்போது எழுதப்பட்டது என்றால் தேதி நியாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாயார் சுப்புலெட்சுமி அம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்த போது எவ்வளவு சொத்தை கிரையம் செய்தார் என்றால் சுமார் 10 செண்ட் ஆகும்.

4. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்சொன்ன 10 சென்ட் நிலமானது எந்த இடத்தில் எந்த திசையில் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 10 செண்ட் இடமானது எந்த வகையில் பிரிக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணமான தானசெட்டில் மென்ட் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் 20 சென்ட் நிலத்தையும் தானசெட்டில்மென்ட் செய்து கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். வா.சா-ஆ.3 ஆவணத்தில் மொத்த ம் 51 ½ சென்ட் நிலத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.154/15 மற்றும்ட 154/16 ஆகிய நிலங்களுக்கு மேற்கு புறம் தென்வடலாக தார் ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

5. மேற்படி தார் ரோடு எப்போதிருந்து அமைக்கப்பட்டது என்றால் எனக்கு விவரம் தெரிந்து நாள் முதலிருந்து மேற்படி தார் ரோடு உள்ளது. தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ.4 ஆவணத்தில் சுப்புலெட்சுமி என்கிற புஷ்பம் என்பவர் மதிக்குமார் மற்றும் பாலன் ஆகியோருக்கு தானசெட்டில்மென்ட் ஏற்படுத்தியுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ-5 ஆவணத்தின் மூலம் மேற்படி மதிக்குமார் மற்றும் பாலன் ஆகியோர் வாங்கிய வா.சா.ஆ.4 சொத்தை பொறுத்து என் பெயருக்கு கிரையம் கொடுததுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வா.சா-ஆ.5 ஆவணத்தில் உள்ளபடி சர்வே எண்.154/15 ல் 30 சென்ட் தங்களுக்கு சொந்தமான 20 சென்ட் போக பவர் பத்திரத்தில் 10 சென்ட் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா-ஆ.5 ஆவணத்தில் சொத்து விவரத்தில் நான்கு எல்லை கண்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

6. வா.சா-ஆ.6 ஆவணம் எனது தாயார் இறப்பிற்கு பின்னிட்டு போலியாக தயார் செய்யப்பட்ட பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி

ஆவணம் எனது தாயார் உயிருடன் இருந்த போது அவரால் எழுதப்பட்டது. மேற்படி ஆவணம் எழுதப்பட்டு எவ்வளவு நாட்கள் கழித்து எனது தாயார் இறந்தார் என்றால் நியாபகம் இல்லை. வா.சா-ஆ.5 ஆவணத்தை எனது தாயார் எப்போது என்னிடம் கொடுத்தார் என்றால் தேதி நியாபகம் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் யார் யார் சாட்சியம் செய்துள்ளார்கள் என்றால் தவசு மற்றும் மீனா ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். மேற்படி ஆவணம் எழுதும் போது எனது தாயாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் சரியாக நியாபகம் இல்லை. மேற்படி வா.சா.ஆ.5 உயில் எழுதும் போது நல்ல மனநிலை மற்றும் உடல்நிலையில் இருந்தாரா என்றால் நல்ல மனநிலையில் தான் இருந்தார். உடல்நிலை சற்று குறைவாக தான் இருந்தார். அவரால் சரியாக நடக்க முடியாது.

7. மணப்பாறை சார்பதிவாளர் அலுவலகத்தில் நான்கு சக்கர வாகனம் வைத்து எனது தாயாரை நானும் எனது மகன் மற்றும் சாட்சி கையொப்பம் செய்த மேற்படி இருவரும் அழைத்து சென்றோம். மேற்படி ஆவணத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் மணப்பாறை சார்பதிவாளர் 6 சென்ட் உயிலை பொறுத்து பதிவு செய்ய முடியாது என்று கூறிவிட்டார். வா.சா.ஆ.5 ஆவணத்திற்கான பத்திரத்தை எங்கு வாங்கினோம் என்றால் மணப்பாறையில் வாங்கினோம். எவ்வளவு மதிப்புள்ள பத்திரம் என்றால் அது பற்றி தெரியாது. எனது மகன் தான் மேற்படி பத்திரத்தை வாங்கினார். மேற்படி பத்திரம் கையில் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் நியாபகம் இல்லை வா.சா-ஆ-5 ஆவணதை யார் தயார் செய்தார் என்றால் ஒரு வக்கீல் தயார் செய்தார். சரியாக நினைவில்லை. மேற்சொன்ன இரு சாட்சிகளை தவிர வேறு சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை.

8. அரசுக்கு சொந்தமான 6 சென்ட் நிலத்தை அபகரிக்க வேண்டி வா.சா.ஆ.5 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் கையெழுத்து போடுவாரா என்றால் இல்லை. கைரேகை வைப்பார். வா.சா.ஆ.1 , வா.சா.ஆ.2, வா.சா-ஆ.5, வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களில் உள்ள எனது தாயாரின் கைரேகையை கைரேகை நிபுணரிடம் பரிசோதனை செய்து ஒப்பிட்டு பார்ப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி வருவாய் துறையினரால் சரியாக தான் எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வருவாய் துறையில் கொடுத்த மனுவில் வருவாய் துறையினர் விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் உரிய ஆவணங்கள்

தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் நான் மனுவில் கோரியுள்ளது போல் எனக்கு பரிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

9. சர்வே எண்.154/15 யை 154/20 ஆக பிரிந்து அதில் 6 சென்ட் ரோடாக வகைப்படுத்தப்பட்டு பிரிந்து சென்றுவிட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் மேற்படி 6 சென்ட் நிலமானது தற்போது ரோடாக பிரிந்துவிட்டதாக கூறி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நான் விண்ணபித்தின் பேரில் எனக்கு பதில் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னது போல் UDR காலகட்டத்தில் மேற்படி 6 சென்ட் நிலம் ரோடாக பிரிந்தது என்றும், எனது தாயார் உயிருடன் இருந்த காலத்தில் வருவாய் துறையினரை அனுகி நடவடிக்கை மேற்கொண்டோமா என்றால் இல்லை.

10. தாவா சொத்தில் 30 சென்ட் நிலம் மட்டுமே எங்களுக்கு பாத்தியம் என்றும், வருவாய் துறையினர் அது குறித்து சரியாக எங்களுக்கு பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்து மேற்படி ரோடு தார் ரோடாக இருந்து வருகிறது என்றும், ஆனால் அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளது தேவையற்றது என்றும், அவர்களுக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**